(திரு. எஸ். திருநாவுக்கரசு பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்)

(கூச்சல் குழப்பம்) புத்தகத்தை எடுத்து, திரு. சண்முகம், திரு. அப்பு நடேசன் ஆகியோரைத் தாக்கிய காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினரின் செய்கை அடாவடித்தனமானது என்று அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி அடாவடித்தனம் செய்து இந்தப் பேரவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்திவிட முடியாது. மிகக் கடுமையான நடவடிக்கைக்கு காங்கிரஸ் கட்சியின் அத்தகைய அடாவடித்தனமான உறுப்பினர் ஆளாக வேண்டிவரும். இங்கே அமர்ந்திருக்கிற உறுப்பினர்களை நோக்கி புத்தகக் கட்டை எறிகிற அந்தச் செய்கை கண்டிக்கத்தக்கது. இந்த அடாவடித்தனத்தை அவையின் சார்பில் கடுமையாகக் கண்டிக்கிறேன். வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் யார் லாபியில் இருந்தாலும் அவர்களை அப்புறப்படுத்தி வெளியேற்றக் கேட்டுக்கொள்கிறேன். அவர்களைத் தூக்கி அப்புறப்படுத்தலாம்.

3. அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவைப் பணிகளினின்றும் உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன் தற்காலிகமாக நீக்கி வைக்கப்பெறுதல்.

திரு. ச. காந்திராஜன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் வெளியிலே செல்கின்றபோது வெளியேயிருந்து இங்கே உள்ளே அமர்ந்திருக்கின்ற திருவட்டாறு சட்டமன்ற உறுப்பினர் திரு. அப்பு நடேசன் மீது பி. வி. இராஜேந்திரன் அவர்கள் புத்தகக்கட்டைத் தூக்கி அவர்கள் மேலே எறிந்தார்கள். எனவே அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு, உச்சகட்ட நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்தகைய அடாவடித்தனமான செய்கையிலே ஈடுபட்ட பி. வி. இராஜேந்திரன் என்பவர் இந்தப் பேரவையின் கடுமையான நடவடிக்கைக்கு உரியவர் ஆவார். இப்போது பேரவையின் விதி 120- ன் கீழ் நானே நடவடிக்கை எடுத்து வெளியேற்றியிருக் கிறேன். மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பது என்பதற்குப் பேரவை முன்னவர் அவர்கள்தான் தீர்மானமாக முன்மொழிய வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன் இந்தப் பேரவையினுடைய கண்ணியத்தைக் குறைக்கின்ற வகையிலேயும் முறை தவறாக நடக்கின்ற தன்மையிலேயும் நடந்துகொண்டு, வன்முறையிலே

ஈடுபட்டு, பேரவையின் அலுவல்கள் நடைபெறாது இடைமறித்து, பேரவையின் விதிகளைத் தொடர்ந்து முறையற்றுப் பயன்படுத்துவதால் சட்டமன்ற பேரவையின் விதி 121 உள்விதியின்கீழ் இன்று அவைக்கு வருகை தந்திருக்கும் திரு. பி. வி. ராஜேந்திரன் அவர்களைத் தற்காலிகமாக இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் நிறுத்தி வைக்கலாம்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

முற்பகல் 11.30

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, அதேமாதிரி சிங்காரத்தினுடைய கழுத்தை பிடித்து நெருக்கினார், திரு. ஞானசேகரன் அவர்கள். அதுவும் தவறு. அவர் மீதும் நடவடிக்கை எடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தாமரைக்கனி, நீங்கள் தெரிவிப்பது வேறு. ஆனால் அது சம்பந்தப்பட்ட உறுப்பினர் திரு. அப்பு நடேசன் அவர்களே அந்த கூச்சல் குழப்பத்தின்போது தெரிவித்த பிரச்சினை. நீங்கள் சொல்வது குறித்து திரு. சிங்காரம் அவர்கள் எழுப்பாத காரணத்தால் இந்தப் பிரச்சினை விட்டுவிடப்படுகிறது.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை. (குறுக்கீடு)

திரு. ஆர். சிங்காரம்: அவர்களை மன்னித்து விட்டுவிடலாம் என்று நான் உங்களை கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓட்டெடுப்பு நேரத்திலே வேறு எதுவும் கூடாது. இல்லை, அவை நடவடிக்கை எடுப்பதற்காக வாக்கெடுப்புக்கு விடும்போது நீங்கள் எதுவும் கேட்பதற்கு இல்லை. நீங்கள் முன்னாடியே கேட்டிருக்க வேண்டும். ஓட்டு எடுப்பு நேரத்திலே கிடையாது.

தீர்மானத்தை ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

தீர்மானத்தை ஏற்போரே அதிகம்

எனவே தீர்மானம் நிறைவேறியது.

திரு. பி. வி. ராஜேந்திரன் இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் பேரவையிலிருந்து நீக்கி வைக்கப்பெறுகிறார் என்பதை அறிவிக்கிறேன். பேரவை வளாகத்தில் எந்தப் பகுதியில் திரு. பி. வி. ராஜேந்திரன் இருந்தாலும் அவரை அப்புறப்படுத்துகிற அதிகாரத்தைக் காவலர்களுக்கு அளிக்கிறேன் திரு. ஆர். சிங்காரம்.